REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 17உ புதன் (30—3—55) ★ ★ வெளியீடு: பங்குனி 18உ வியாழன் (31—3—55) [இதழ் 246

அணு யுத்தத்திற்கு ஆயத்தமா?

அமெரிக்காவில், வாஷிங்டன் நகரம், உட்பட்ட 50 பெரும் நகரங்களில் 'போலி அணு ஆயுதப் போர்' ஜூன் திங்கள் 15-ந் தேதியன்று நடைபெறுமாம்! அலாஸ்கா, ஹாவாய் தீவுகள், பனாமா கால்வாய் மண்டலம், உட்பட்ட பல விஸ்தீரணமான பிரதேசங்கள் இந்தப் போருக்குப் பயன்படுமாம்!

இப்பகுதிகளிலுள்ள அமெரிக்கக் குடிகள் தங்கள் வீடுகளைக் காலி செய்துவிட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுவாராம்! 'அணுப் போரி'ல் காயமுற்றோருக்கு மருத்துவ வசதியும், உதவியும் தரப்படுமாம்! இங்குள்ள மக்கள் தங்கள் வீடுகளைக் காலி செய்வதற்கு 'ஒத்திகை' போலவே இது, சுமார் 26 மணி நேரம் நடைபெறுமாம்!

இந்தியப் பேரரசின் பாரபட்சம் அம்பலம்!

டி.டி.கே.-யின் கேலிப்பேச்சுக்கு சூடு!

நெய்வேலி நிலக்கரி கொண்டே சேலம் இரும்பை உருவாக்க முடியும்

எஸ். வி. ராமசாமி எம். பி.-க்கு ஜெர்மன் நிபுணர் எழுதிய கடிதத்தில் விளக்கம்

சேலத்திலும், திருச்சிராப்பள்ளியிலும் இருக்கும் இரும்புக் கனிப் பொருளை சுத்தப்படுத்தப்பட்ட இரும்பாகவும், உயர்ந்த உருக்காகவும் பெரிய அளவில் உருவாக்க முடியும் என்ற உண்மையை, ஏற்கனவே ஜெர்மனிக்ருப் உருக்குத் தொழில் நிலையத்தில் பணி புரிந்தவரும், இப்பொழுது இந்தியப் பேரரசின்கீழ் பணி புரிந்து வருபவருமான ஜெர்மன் கனிப் பொருள் நிபுணர் அறிவித்துள்ளார்.

1944-ம் ஆண்டு கனிப் பொருள் ஆராய்ச்சி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, சேலத்து இரும்பைப் பயன்படுத்த வேண்டுமென இடைவிடாது தீவிரமாக முயற்சித்து வரும், சேலம் மக்கள் சபை உறுப்பினரான எஸ். வி. இராமசாமி அவர்கள், மேற்குறிப்பிட்டுள்ள ஜெர்மன் நிபுணருடன் கடிதப் போக்குவரத்து நடத்தியுள்ளார்.

"இருக்கும் நிலைமை முழுதும் சென்னைக்கு மகிழ்ச்சியூட்டக் கூடியதாக இருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது," என அந்த நிபுணர், தாம் எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர், அக்கடிதத்தில் கொடுத்துள்ள விளக்கம் வருமாறு:

"ஒரு உருக்குத் தொழிற்சாலையைத் துவங்குவதற்குப் போதுமான அளவில், சேலத்தில் இரும்புக் கனிப்பொருள் இருக்கிறது.

"கனிப் பொருளைத் தோண்டி எடுப்பதில், குறிப்பிடத்தகுந்த சிக்கல் எதுவும் கிடையாது.

"நல்ல பாதைகளும், புகை வண்டிப் போக்குவரத்து வசதிகளும் தேவையான அளவில் இருந்துவருவதால், கனிப் பொருளைக் கடத்துவதும் மிகமிக இலகுவாகும்.

"கனிப்பொருள் போதிய அளவில் உயர்ந்ததாகும். பெரிதும் சுயகாந்த படிகளாக இருப்பதால், அக்கனிப் பொருள் உருக்கப்படுவதற்கு முன்பாக, அது தூளாக்கப்பட்டு, காந்தப் பொறியின் துணையால், ஏறத்தாழ 60 சதவிகிதம் உள்ள இரும்பைப் பிரித்தெடுத்து, பிறகு இரும்புச் சதுரங்களாக உருக்கி ஊற்றப்படவேண்டும். அதிலுள்ள எரி பாஷாணசத்தைக் குறைப்பதிலும் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

"கனிப்பொருளை உருக்காக மாற்றுவதற்கு வேண்டப்படும் எரி பொருளும், சிக்கன உலைக் கூடமும் முக்கியப் பிரச்சினையாகும். தென்னிந்தியாவில் நிலக்கரி கிடைக்காத காரணத்தினால் நிலக்கரி உலையைக் கருதுவதற்கே இடமில்லை. காட்டுக்கரி குறைவாகக் கிடைப்பதாலும், செலவு பெருகக்கூடுமாதலாலும், காட்டுக்கரி உலைக்கூடமும் ஒதுக்கப்பட வேண்டியதாகிறது. அதே காரணத்திற்

(4-ம் பக்கம் பார்க்க)

✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶

தி. மு. கழக கிளைகள் தேர்தல்

கடந்த 27—3—55 அன்று, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அறிக்கைக்கிணங்க நடைபெற்று முடிந்துள்ள கழகக் கிளைகள் தேர்தல்கள் பற்றிய முழு விபரங்களும் கிடைத்த பின்னர், மாவட்ட வாரியாக வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

★★★★★★★ ★★★ ★★★★★★★

டெல்லி ஆட்சியின் நிர்வாக லட்சணம்!

160 கோடி ரூபாய் வருமான வரி வசூலிக்கப்படவில்லை!

அகமதாபாத், மார்ச் 27—

"கடந்த 1934-55ம் ஆண்டில் வசூலிக்கப்படாது நிலுவையாயிருக்கும் வருமான வரித் தொகை சுமார் 160 கோடி ரூபாய்," என்று, மத்திய அரசாங்க ரெவினியூ மந்திரி எம். சி. ஷா இங்கு பத்திரிகை நிருபர்களிடை கூறியிருக்கிறார்.

பாகிஸ்தானுக்குச் சென்றுவிட்டவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வருமான வரி ரூ. 11 கோடியை, அரசாங்கம், 'வராத கணக்கில்' எழுத வேண்டியதாயிற்று என்ற தகவலை அவர் வெளியிட்டிருக்கிறார்.

மணமானவர்களுக்கு வருமான வரி விஷயத்தில் தரப்பட்டிருக்கும் வரிச் சலுகை, ஒரு குடும்ப 'அலவன்ஸ்' ரீதியானது என்றும் அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

நாட்டின் பொருளாதார நிலைமையை சர்க்கார் கவனித்து வருவதாயும், நெருக்கடி முற்றுதவாறு தடுக்க சர்க்கார் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அணுகுண்டு பரிசோதனை அதிகமாகிறது!

அமெரிக்காவிலுள்ள நெவேடா எனும் பாலைவனத்தில், 500 அடி உயரமான ஒரு கோபுரத்திலிருந்து பெரிய அணுகுண்டு ஒன்று வீசப்பட்டதென்றும், இந்தத் தொடரில் வீசப்பட்ட அணுகுண்டுகளில் இது தான் மிகப் பெரியதென்றும் கூறப்படுகிறது.

அந்தக் குண்டு வெடித்ததும், அதனின்றும் கிளம்பின ஒளி, 360 மைல் தொலைவுக்கு அப்பாலுள்ள லேக்-சிட்டி எனும் ஊரில்தெரிந்ததாம். மேலும் அதன் விளைவாக, 75 மைல் தொலைவிலுள்ள லாஸ் வேகாஸ் எனும்இடத்தில் அதிர்ச்சியும் எதிரொலித்ததாம். குண்டு வீசப்பட்ட இடத்திலிருந்து விமானங்கள் எழுப்பின புகைச் சுருள்களும் நன்றாகக் கண்ணுக்குத் தெரிந்ததாம்.

அதே நாளில் மீண்டும் ஒருமுறை மற்றொரு அணுகுண்டுப் பரிசோதனை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும், ஒரே நாளில் இதுவரை இரண்டு அணுகுண்டுகள் வெடிக்கப்பட்டதே கிடையாது என்றும் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

இந்தியாவில் கைத்தறித் தொழில், ஆண்டில் 200 நாட்களுக்கு முழுநேர வேலை அளிக்கும் அடிப்படையில், மொத்தம் சுமார் 15 லட்சம் தொழிலாளர்களுக்கு வேலை அளித்து வருகிறது.

'முதல் மந்திரி பொய் கூறுகிறார்!'

'எதிர்க்கட்சி உறுப்பினர் 'அரசியல் படாடோபம்' காட்டுகிறார்'

'முதல் அமைச்சர்தான் அதைச் செய்கிறார்'

மத்தியப் பிரதேச சட்டசபை முச்சந்தியாகிறது!

நாகபுரி, மார்ச் 28—

நிலத்தை 'இயந்திரக் கலப்பையைக் கொண்டு உழும்' ஏற்பாடு ஒன்றை மத்தியப் பிரதேச காங்கிரஸ் அரசாங்கம் செயலாற்றுகிறது. விவசாயிகள் அனைவரும் அம்முறையை ஏற்றுக் கொள்ளக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

ஔரங்காபாத் மாவட்டத்தில், விரும்பாதவர்களைக்கூட இயந்திரக் கலப்பை உழவை அரசாங்கம் கட்டாயப்படுத்துவதைக் கைவிட வேண்டுமெனவும், அப்படி கைவிடப்படும் வரை தாம் உண்ணாநோன்பு இருக்கப்போவதாகவும் பிரேம்நாத் வாசனிக் என்ற எதிர்க் கட்சி சட்ட சபை உறுப்பினர் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

அந்த உண்ணா நோன்பு அறிவிப்பை, 'அரசியல் படாடோபம்' காட்டுகிறார் என முதல் மந்திரி ரவி சங்கர் சுக்லா சட்ட சபையில் குறிப்பிட்டார்!

எதிர்க் கட்சியைச் சேர்ந்த மற்றொரு உறுப்பினர், 'முதல் மந்திரி பொய் கூறுகிறார்' என கூவினார்! 'முதல் மந்திரிதான் அரசியல் படாடோபம் செய்கிறார்' என் வாசனிக் கூச்சலிட்டார்!

இவ்வாறு எதிர்க்கட்சியினர் கூச்சலிடுவது கண்டு அஞ்சிவிடாமல்—ஆனால் சட்ட சபையின் ஒழுங்குமுறையைத் துளியும்கருதாமல்—முதல் மந்திரியும் ஊரத்து ஔரங்காபாத் தொகுதியில் நடைபெற இருக்கும் மக்கள் சபை துணைத் தேர்தலைக் குறியாகக் கொண்டுதான் எதிர்க்கட்சியினர் இப் 'படாடோபம்' செய்கின்றனர் என்று கூச்சலிட்டார்!

சட்ட சபை தலைவர் கட்டளைக்கிணங்க எதிர்க்கட்சி உறுப்பினர்களும், முதல் மந்திரியும் ஒருவர் மீது ஒருவர் கூறிய இழிமொழிகளை திரும்பப் பெற்றுக்கொண்டனர்.

இராணுவ இலாகாவில் ரூ. 10 கோடி சிக்கனம்

நடைமுறை ஆண்டில், தற்காப்பு இலாகாவில் சுமார் ரூ. 10 கோடி சிக்கனமான செலவின் காரணமாக மிச்சப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

துவக்கச் செலவில் ரூ. 4 கோடியும், நிகழும் செலவில் ரூ. 6·3 கோடியும் மிச்சப்படுத்தப்பட்டதாம்.

முப்படைகளின் கூட்டு முயற்சியினால், சிக்கனமாகச் செலவு மேற்கொள்ளப்பட்டு இந்தத் தொகை மிச்சப்படுத்தப்பட்டதாம்.

ஆஸ்தீகர்கள் டெல்லிக்குக் காவடி

பெரியார் மீது அப்பீல் வழக்காம்!

புதுடில்லி, மார்ச் 29—

திருச்சியில், தேவர் மைதானத்தில் இரண்டாண்டுகளுக்கு முன் பிள்ளையார் சிலையை உடைத்தது இந்து மத நம்பிக்கை கொண்டோரின் மனம் புண்படும் செயலாகுமென திராவிடர் கழகத் தலைவர் ஈ.வெ.ரா., மற்றும் இருவர் மீதும், எஸ். வீரபத்திரன் செட்டியார் என்பவர் தொடர்ந்த வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்திலும் தள்ளுபடி செய்யப்பட்டது நினைவிருக்கலாம்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து, டெல்லி தலைமை உயர் நீதிமன்றத்தில், வீரபத்திரன் செட்டியார் அப்பீல் வழக்குத் தொடர்ந்துள்ளாராம். அதனை தலைமை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்தியன் பினல் கோடு 295-ம் பிரிவின் கீழ் உள்ள குற்றத்தை பெரியார் செய்ததாக புகார் செய்யப்பட்டது.

பஞ்சாப் சட்டசபையில் குழப்பம்!

இலஞ்சக் குற்றம் சாட்டி மந்திரிமீது புகார்

சபை ஒத்திவைக்கப்பட்ட சம்பவம்

சாந்திகார், மார்ச் 29—

பஞ்சாப் மாநில சட்ட சபையில் புயல் வீசியிருக்கிறது; 'போர்க்கள'மாகக் காட்சி தந்திருக்கிறது. நிலைமை சீர்படுவதற்காக அரை மணி நேரத்திற்கு சபையைத் தலைவர் ஒத்திவைத்தார்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு
திராவிடத்தின் இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 30—3—'55 புதன்

அழியுமா? — அடிமை மோகம்!

"ஒரு பக்ரா-நங்கல் அல்லது தாமோதர் நதித் திட்டம் வடநாட்டில் இருக்கலாம்; தென்னுட்டில் பெரிய திட்டங்களேதுவுமில்லாமலும் இருக்கலாம்; ஆனுல், தென்னுடு புறக்கணிக்கப்பட்டுவிட்டதாகக் கூற முடியாது;

"தென்னுட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுகிறதென்ருல், அதிக உற்பத்தி சக்தியும், அதிக நீர்ப்பாசன வசதிகளும் உள்ள வடநாடு, தென்னுட்டின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும்; தொழில் உற்பத்தி ஆகட்டும், அல்லது வேலை வாய்ப்பாகட்டும் — அவை ஒவ்வோரு துறையிலும் வடநாடு அதுபோலத்தான் நடந்துகொள்ளும்,"

என்று மத்திய அரசாங்கத் தொழில் வர்த்தக அமைச்சராக இருக்கும் திரு. டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் சில தினங்களுக்கு முன்பு கூறியிருக்கிருர்.

'தென்னுடு-வடநாடு என்று பிரித்துப் பேசுவதே ஆகாது; கூடாது," என்று பேசும் காலம் இருக்கத்தான் செய்தது; ஆனல், அந்தக்காலம் சென்றுவிட்டது!

இன்று, இந்தியா, ஒன்ருகப் பேசப்படவில்லை — பேசப்பட முடியவில்லை; தென்னுடு—வடநாடு என்று பிரித்துத்தான் பேசவேண்டியுள்ளது. நம்மால் மட்டுமல்ல; நாம்தான் எப்போதும் அப்படியே பேசுபவர்களாயிற்றே! பேசாதவர்கள் —பேசக் கூடாதவர்கள் எல்லாம், இன்று, பிரித்துத்தான் பேசவேண்டியவர்களாயிருக்கிருர்கள். அதற்கான காரணம் ஆயிரம் உண்டு; ஆனுலும், அங்கைநெல்லிக்கனியாக, குன்றுத் தீபமாகத் தெரிவது, இரண்டாயிரம் கோடி ரூபாய்களும் அதிகமான செலவில் தயாரித்து நிறைவேற்றி வரும் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னகத்திற்குச் செய்த நயவஞ்சகம்!

'ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னுடு புறக்கணிக்கப்பட்டது — வஞ்சிக்கப்பட்டது,' என்பதை நாம் மட்டுமா கூறினேம்?

ஆவடியில் திருமதி அம்புஜம்மாள், பெரியநாயக்கன்பாளையத்தில் சென்னை நிதியமைச்சர் கனம் சுப்பிரமணியம், டெல்லி பாராளுமன்றத்தில் திரு-கொச்சி அன்னி மாஸ்கரைன், மைசூர் ம. சோ. கட்சியைச் சார்ந்த குருபாதசாமி, சென்னை மாநிலத்தின் பல கட்சி உறுப்பினர்களெல்லோரும் குரல் எழுப்பியிருக்கின்றனர் — இந்தக் கொடுமை குறித்து!

இப்படி எல்லோர் கண்ணையும் உறுத்தியிருக்கிறது—வடநாடு, தென்னுட்டிற்குச் செய்த வஞ்சகம். ஆனுலும், அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் 'தென்னுட்டில் பெரிய திட்டங்களில்லாமலிருக்கலாம்; ஆனுலும், தென்னுடு புறக்கணிக்கப்பட்டிருப்பதாகப் புகார் கூற முடியாது,' என்று கூறியிருக்கிருர் என்ருல் இதற்கு என்ன பொருள்?

'எல்லாம் அங்கே; இங்கே எதுமில்லை,' என்ருன பிறகும் கூட, புகார் கூறக் கூடாதாம! எப்படி முடியும் கூருமலிருக்க? இவரைப்போலவே எல்லோரும் 'அடிமை மோகம்'கொண்டவர்களாயிருக்க முடியாதே!

தேய்ந்து வரும் தென்னுடு திண்டாடினுல், வளமாகும் வடக்கு வலிய வந்து உதவுமாம்; தேவைகளைப் பூர்த்தி செய்யுமாம்; — மேலும் கூறுகிருர், ஆச்சாரியார்! அவரது இந்தக் கூற்று எள்ளத்தனையும நியாயத்தின்பாற்பட்டதல்ல என்றுதானே, கடந்த ஏழுை ஆண்டுக் கால அனுபவம் நமக்குச் சொல்கிறது?

"அரிசி கிடைக்கவில்லை என்ருல் என்ன, குடி முழுகிவிடாது; பிண்ணுக்கையும், பருத்தி விதையையும தின்று பழகுங்கள்" என்று பகன்ருரே, மத்திய அரசாங்க முன்னுள் உணவு மந்திரி முன்ஷி— மறந்துவிடவில்லையே, நாமும், நாடும்!

தென்னுடு, வட நாட்டவருக்கு ஒரு 'மார்க்கெட்', 'காலனி', 'அடிமை பூமி', என்ற நிலையிலிருந்துவரும் பேருண்மையைத் தெள்ளத் தெளிவாக, கடந்தகால நடைமுறை அனுபவம் சொல்லிக் கொண்டிருக்கிறது. அதை உறுதிப்படுத்துகிறது, ஐந்தாண்டுத் திட்டம்!

தென்னுடும் விழித்துக் கொண்டது - தூக்கத்திலிருந்து. விரட்டு எழுந்துவிட்டது— உரிமை கோரி! கட்சிப் பாகுபாடுகளைக் கடந்து வடவரின் வஞ்சகச் செயலுக்கு எதிராக; திராவிடத்திலிருந்து முழக்கம் எழும்பிவிட்டது.

திராவிடரின் கொழுந்துவிட்டெரியும் எழுச்சித் தீச்சுடரை, 'வடக்கு வளமானுலும், தெற்கு திண்டாடும்போது உதவும்; ஆகவே, புகார் கூருதீர்' என்று கூறும் தமது அடிமை போகச் சொற்களைனும் 'நீர்த்துளி'களைக்கொண்டு அணைத்துவிடப் பார்க்கிருர் அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார்.

எதிர்ப்பு வெள்ளம், கரை புரண்டுவிட்டது; அணை போட முயன்று பார்க்கிருர்! அனுதாபப்படுகிருேம், அவரது அடிமை மோகத்திற்காக!

தற்கொலைக்கு ஒப்பானதாம்!

"கம்யூனிஸ்டு நாடுகள் அனுகுண்டுகளையெல்லாம் ஒழிக்க முன்வரர்விட்டால், அமெரிக்காவும், பிரிட்டனும் அவற்றை ஒழிப்பதென்பது தற்கொலைக்கு ஒப்பான ஒன்ருகும்."

இவ்வாறு ஆஸ்திரேலிய சர்க்கார் அயல் நாட்டமைச்சர் கேசி, தாம் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவின் போது குறிப்பிட்டிருக்கிருர்.

1954-ம் ஆண்டின் கடைசி மூன்று மாத காலத்தில் மொத்தம் சுமார், 16 கோடி பவுண்டு கச்சா புகையிலையும், தயாரிக்கப்பட்ட புகையிலையும் பிரிட்டன், ஜப்பான், சீன ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

சென்னை சட்டசபையில்....

★

'புலி' வருகிறதாம்— 'பழமும்' பழுக்கப் போகிறதாம்!

"வரும் ஆகஸ்டுத் திங்களில் நிலச் சீர்திருத்த மசோதா கொண்டு வரப்படும் என்று முதலமைச்சர் காமராசர் சொல்லியிருக்கிருரே; அது சர்க்காருக்குத் தெரியுமா? மசோதா தயாராகி வருகிறதா? அது இப்போது எந்தக் கட்டத்தில் இருக்கிறது?" என்ற கேள்விக்கு அமைச்சர் மாணிக்கவேலர், முதன் மந்திரி கூறியுள்ளது தெரியுமென்று கூறிவிட்டு, "அச்சட்டம், வருகிற கோடை மாதத்தில் பழமாகப் பழுத்துவிடும்," என்ருர்

"இந்த நிலச் சீர்திருத்தம் பற்றி பலதரப்பட்டவரின் கருத்தைத் திரட்டி த. நா. கா. குழுவினர் தந்துள்ள தகவல்களெல்லாம் சட்டசபையில் வைக்கப்படுமா?" என்ற கேள்விக்கு, அமைச்சர், அது, சர்க்கார் அமைத்த குழு அல்ல என்றும், அதுபற்றிய விவரங்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு எழுதிக் கேட்டால் தருவார்கள் என்றும், தமக்கு எழுதிக்கேட்டுக் கொண்டாலும் தாம் தருவதற்குத் தயாராக இருப்பதாகவும் கூறினர்

"நிலச் சீர்திருத்தச் சட்டம் 'புலி' போல் வருகிறது என்று அமைச்சர் குறிப்பிட்டார்; குகைக்குள்ளாக இருக்கும் அந்தப் 'புலி' எப்போது குகையை விட்டு வெளியேறப்போகிறது?" என்று தோழர் எ. கோவிந்தசாமி கேட்டபோது, அமைச்சர், "வெய்யில் காலத்தில் புலி குகைக்குள் இருக்க முடியாது; எப்படியும் அது வெளி வந்தாக வேண்டியதுதானே" என்று கூறினர்.

"கட்டவிழ்த்துவிடப் போகிற இந்தப் 'புலி' யார் மீது—நிலப் பிரபுக்கள் மீதா, அல்லது ஏழை விவசாயிகள் மீதா?—பாயப் போகிறது? நிலச் சீர்திருத்தம் வரப்போகிறது என்று கேட்டவுடனேயே நிலச்சுவான்கள், தங்கள் நிலங்களிலிருந்து ஏராளமான ஏழை குடியானவர்களை வெளியேற்றுகிருர்கள்; நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துக்கொள்பவர்களும்கூட தங்களை 'கூலிக்காரர்'கள் என்று எழுதிக் கொடுத்தால் தான் குத்தகைக்கு நிலம் விடப்படுகிறது; இதுபற்றி உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?" என்ற கேள்விக்கு, அமைச்சர், "புலி, சாதாரண எலும்பும் தோலுமாக இருப்பவர்கள் மீது பாயாது; குண்டாக, நன்ருக இருப்பவர்கள் மீதுதான் பாயும்" என்ருர்.

இறுதிப் பரிசீலனையா?

பீடி உற்பத்தி உட்பட்ட எல்லா புகையிலைத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கான ஊதிய நிர்ணயத்தை அறிவித்து சர்க்கார் பூர்வாங்கமான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதென்றும், இதுபற்றி கிடைக்கப்பெற்ற யோசனைகள் அனைத்தும் வரவேற்கப்பட்டுள்ளன என்றும், இறுதியான ஊதிய விகிதங்களின் நிர்ணயம் பற்றி சர்க்கார் இன்னும் பரிசீலனை செய்து வருகிறது என்றும் அமைச்சர் பக்தவத்சலம் கூறியிருக்கிருர்

அப்படி ஒன்றுமில்லை!

"சென்னை மந்திரி சபையை விரிவுபடுத்தும் பிரச்சினை அரசாங்கப் பரிசீலனையிலிருக்கிறதா?" என்ற கேள்விக்கு, 'அப்படி ஒன்றுமில்லை' என்று அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

"ஆந்திரப் பிரிவினைக்கு முன்னர் எல்லா பகுதியினருக்கும் அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் என்றிருந்த நிலைமை கைவிடப்பட்டது என்?" என்ற கேள்விக்கு, அமைச்சர், 'அப்படி ஒன்றும் கைவிடப்பட்டது கிடையாது' என்ருர்

சமூக நல ஆலோசனைக் குழுவிற்கு ரூ. 52,181

சென்னை மாநில சமூக நல ஆலோசனைக் குழுவிற்கு ரூ - 52,181 வழங்கப்பட்டிருக்கிறதென்றும், சென்னை மாநிலத்தில், அந்தக் குழு, 12 க்ஷேம நல திட்டங்களை 237 கிராமங்களுக்கு உதவ 47 இடங்களில் ஆரம்பித்துள்ளதென்று, அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்தார்.

இத்திட்ட அமுலுக்கென 113-பேர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும். தனிப்பட்ட சில நிறுவனங்களிடமிருந்தும்கூட நிதி உதவி கோரி 170 மனுக்கள் வந்துள்ளன என்றும், அவற்றுள் மத்தியக் குழுவிற்கு 125 மனுக்கள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவித்திருக்கிருர்.

'மனிதப் பண்பு'க்கு மந்திரியின் 'மதிப்பு'!

மதுவிலக்குச் சட்டத்தை மீறி குற்றம் புரியும் சர்க்கார் சிப்பந்திகள்மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் வெளியிட்டுள்ள உத்தரவு பற்றிக் கேள்வி கேட்கப்பட்டபோது, அமைச்சர் சுப்பிரமணியம் பதிலளிக்கையில், அச்சிப்பந்தி, முதன் முறையாகக் குற்றம் செய்திருந்தால் வழக்கின் தன்மையைக் கவனித்துத் தண்டனை விதிக்கப்படுமென்றும், அவர், இரண்டாம் முறையாகக் குற்றம் புரிந்தவராக இருந்தால், அவர் வேலையினின்றும் நீக்கப்படுவார் என்றும் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளதென்ருர்.

"சர்க்கார் சிப்பந்திகளும் மனிதர்களே ஆதலால் அவர்கள், இயற்கையாகவே ஒருமுறை குற்றமிழைத்தால் 'மனிதப் பண்பு'க்கு ஏற்ப தாராளமான மனப்பான்மையுடன் விட்டுக்கொடுக்கப்படவேண்டும்; முதல் குற்றத்திற்கே கடும் நடவடிக்கை எடுப்பதென்பது மிகக் கடுமையானதாகி விடலாம்" என்ருர்.

உத்தேசம் இல்லையாம்!

"சென்னை நகரில், குழந்தைகளுக்கென தனிப்பட்ட மருத்துவமனை எதையும் திறக்க சர்க்கார் உத்தேசிக்கவில்லை" என்று அமைச்சர் ஏ. பி. ஷெட்டி அறிவித்தார்.

'திட்டம்' நிறைவேறுமா?

சேலத்திலும், அருப்புக்கோட்டையிலும் நெசவுத் தொழிலாளர் கட்குடிசைகள் கட்டித்தருவதுபற்றி, மத்திய சர்க்காருக்கு சென்னை சர்க்கார் அனுப்பியிருந்த திட்டம் ஒன்று, மத்திய சர்க்காரின் பரிசீலனையில் இருந்து வருகிறதென்று அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

ஒவ்வொரு இடத்திலும் 200 வீடுகள் கட்டித் தருவதென்று அத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளது என்று குறிப்பிட்டார்.

இதுமட்டுமல்லாமல், 5 நெசவாளர் சங்கங்களுக்கும், நெசவாளர்களுக்கும் வீடு கட்டித்தர கடன் தொகை அளிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

ஆர்வமாமே!

பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இலவச பகல் உணவு தரும் விஷயத்தில் சர்க்கார் 'ஆர்வமாக' இருந்து வருகிறது என்றும், இதற்குச் சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வரி விதிப்பு அவசியம் என்று காணப்பட்டால்கூட, சர்க்கார் அது பற்றி யோசிக்கும் என்றும் அமைச்சர் சுப்பிரமணியம் கூறினர்.

நில உடைமை புள்ளி விவரம் சேகரிப்பு

சென்னை மாநிலத்தில் நில உடைமை பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிப்புக்கு ரூ. 2,84,100-செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுவதாகவும், இப்புள்ளி விவரச் சேகரிப்பு, எல்லாவிதமான நில உடைமைகள் பற்றியும் எடுக்கப்பட்டு வருவதாகவும், இதற்கான வேலைகள் இன்னும் பூர்த்தியடையவில்லை என்றும் கூறியிருக்கிருர் அமைச்சர் மாணிக்கவேலர்.

இப்புள்ளி விவரங்களெல்லாம், குத்தகை, சொந்தச் சாகுபடி போன்ற நிலங்கள் பற்றிய தகவல்

அதுவும் அங்கேதானு?

ரூ. 2½ கோடி செலவில் காகிதத் தொழிற்சாலை

இந்திய சர்க்கார் முயற்சி

இந்தியாவில், பூரண சாதன வசதிகளுடன் கூடிய கடன் பத்திரங்கள், ரூபாய் நோட்டுக்கள் காகிதத் தொழிற்சாலையொன்றை ஏற்படுத்துவதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர். அம்முயற்சி, முக்கியமான உற்பத்தித் தொழிலொன்றை உள்நாட்டிலேயே உருவாக்குவதற்கும், இந்தியா, வெளிநாட்டுச் 'சப்ளை'களையே நம்பியிருந்துவரும் நிலைமை நீங்குவதற்கும் வழிவகுப்பதாக இருக்கும், சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு. இந்தியாவில் நோட்டுப் பழக்கம் பெரிதளவு அதிகரித்திருப்பதுடன், கடன் பத்திரங்களுக்கான காகிதம் சம்பந்தமாகவும் சர்க்கார் தேவைகள் பெருமளவு அதிகரித்துவிட்டன. இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த சுமார் 2½ கோடி ரூபாய் செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழிற்சாலை இடம் பற்றிய பிரச்சினைகள், மற்றும் இதர பல்வேறு பிரச்சினைகள் பற்றிய பூர்வாங்க ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

களைப் பெறவே சேகரிக்கப்படுகின்றன என்று கூறினர்.

இந்த வேலைகளுக்காக, ஒரு ஸ்பெஷல் டெபுடி கலெக்டரும், ஒரு சூப்பரின்டெண்டு உட்பட 6-பேரும், கலெக்டர் காரியாலயத்தில் 2 சிப்பந்திகளும், தாலுகாக்களில் 12 தாசில்தார்கள், 120-குமாஸ்தாக்கள், 583 ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், 822 பியூன்கள் ஆகியோரும் அதிக சிப்பந்திகளாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவலையும் அவர் தந்துள்ளார்.

தொழிலாளர்களுக்குப் போனஸ்

"கைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குப் 'போனஸ்' வழங்குவதைக் கட்டாயமாக்கி சட்டம் இயற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளதா?" என்ற கேள்விக்கு, இல்லை என்று அமைச்சர் பக்தவத்சலம் பதிலளித்தார்.

"'போனசுக்'கான அடிப்படைக் கொள்கையையாவது நிர்ணயிக்கலாமே?" என்று மீண்டும் கேட்கப்பட்டபோது, அமைச்சர் "இப்பிரச்சினை 'டிரிபியூனல்'களின் தீர்ப்பிற்கிணங்க கவனிக்கப்படும்" என்ருர்.

"'போனஸ்' ஏதும் இல்லாமல் ஊதியத்தை அதிகரிப்பது பற்றிக் கவனிக்கலாமா?" என்று கேட்கப்பட்டபோது, அமைச்சர், இது பரிசீலனை செய்ய வேண்டிய ஒரு விஷயமாகும் என்றும், தம்மால் இதை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் கூறினர்

கூட்டுறவு முறையில் கைத்தொழில்கள்

சில சிறிய கைத்தொழில்களைக் கூட்டுறவு முறையில் அமைக்கத் திட்டமிடுமாறு இந்திய சர்க்கார் கோரியது, மாநில சர்க்காரின் பரிசீலனையில் இருந்துவருவதாகவும், இதற்கான திட்டமெதுவும் இதுவரை பூர்த்தியாகத் தயாரிக்கப்படவில்லை என்றும் அமைச்சர் பக்தவத்சலம் கூறினர்.

4-மாவட்டங்களுக்கு ஆலைகள்?

சாய விடுதிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்ய மத்திய சர்க்கார், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்தர, ரூ 1,99,440-ஐ ஒதுக்கியுள்ளதென்றும், இவ்வுதவியை இச்சங்கங்கள் பயன்படுத்திக்கொள்ளாவிட்டால், சென்னை மாநில கைத்தறி நெசவாளர் சங்கம், திருநெல்வேலி, திருச்சி, தென்னுற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் சாயத்தொழிற்சாலை நிறுவ இருப்பது சென்னை மாநில சர்க்காரின் பரிசீலனையிலிருந்து வருவதாகவும் அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்தார்.

தமிழகமெங்கும் ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்

பேரூர் போதுக் குழுவின் தீர்மானப்படி, தமிழகமெங்கும் 'ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள்', தி. மு. கழகத் தோழர்களால், போதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தப்பட்டும், செயற்குழு கூடி கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டும் சிறப்புற கொண்டாடப்பட்டுள்ளது. விவரங்கள் சுருக்கிக் கீழே தரப்பட்டுள்ளது :—

வேப்பம்பட்டி

20—3—55ல், ஊர்வலமும், பின்னர் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் க. புவியரசன், செ. இளமதி, க. செல்லப்பா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

குன்னத்தூர்

20—3—55 மாலை 7 மணிக்கு தேர்த்திடலில், தோழர் என். டி இராமசாமி தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர்கள் க. அன்பரசு, கோவை அரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருப்பாலக்குடி

20—3—55 மாலை 6 மணிக்கு தோழர் முத்துக்கண்ணு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ப. நாராயணசாமி, கரந்தை கணேசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சின்னாளப்பட்டி

20—3—55ல், வள்ளுவர் திடலில், தோழர் என். ராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ் சேதுபதி, கு. ஜெயராம், உடுமலை ஆர். நாராயணன் ஆகியோர் பேசினர்.

கோட்டக்குப்பம்

20—3—55ல், தோழர் என். இராசசேகரன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஜி. இராமசாமி, யாஜி, பாஷா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

நாகப்பட்டினம்

20—3—55 மாலை 6 மணிக்கு, கழகக் கட்டிடத்தில், தோழர் ஆர். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எ. எஸ். பாண்டியன், ஜோசப், கே. கே. சித்ரவேலு, சி. ஜம்பு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பெங்களூர்—அக்கிப்பேட்டை

20—3—55 காலை 10 மணிக்கு ஜே. கனகசுந்தரம் தலைமையில், கழக மனையில் நடைபெற்றது. தோழர்கள் ஏ. சங்கரன், எம். கிருட்டிணன், ஏ. கங்காதரன், சி. என். சாமி, ஜி. கிருட்டிணன், சி. உலகநாதன், பொன்னுரங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பேராவூரணி

20—3—55 மாலை 4 மணிக்கு ஆதனூர் ஊமத்த நாடு கிராமத்தில் தோழர் எம். கே கணேசன் தலைமையில் ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

உசிலம்பட்டி

20—3—55 மாலை $4\frac{1}{2}$ மணிக்கு கே. என். பேயத்தேவர் தலைமையில் ஊர்வலமும், பின்னர் தோழர் எஸ். பி. மாணிக்கம் தலைமையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பி எஸ். சிவங்காளை, உசிலைத்தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பம்பாய்—கொலாபா

20—3—55 காலை $9\frac{1}{2}$ மணிக்கு கூபரேஜ் திடலில், தோழர் எஸ் கே. ராஜு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆர். ஜேஜார்ஜ், க. சு. மசகநாதன், கே. கே. இராமநாதன், எஸ். பி பெருமாள் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருச்செங்காட்டுப்பட்டி

21—3—55 இரவு $7\frac{1}{2}$ மணிக்கு தேரடி மைதானத்தில் தோழர் மூ. குருசாமி தலைமையில் நடைபெற்றது. கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஈ. வெ. கி. சம்பத் நிகழ்ச்சிகள்

★

துவரங்குறிச்சி

16—3—55 மாலை 6 மணிக்கு, துவரங்குறிச்சி முக்கூட்டுச் சாலையில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் தோழர் சபாபதி தலைமையில் நடைபெற்றது தோழர்கள் இரா. நடராசன், வீ. ந. இராமச்சந்திரன், ந. தருமலிங்கம், என். எஸ். இளங்கோ ஆகியோர் பேசிய பின் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், இந்திய சர்க்காரின் ஐந்தாண்டு திட்டத்தை கண்டித்து முழக்கமிட்டார்.

கீரமங்கலம்

17—3—55ல், கீரமங்கலத்தில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களை வரவேற்று, ஒரு மாபெரும் ஊர்வலம் பஸ் ஸ்டாண்டிலிருந்து நடைபெற்றது. மாலை 5-30 - மணிக்கு, சினிமா கொட்டகை திடலில் தோழர் கொ. ப. சுப்பையா தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சிவ குருநாதன், ம. ரா. மணிமொழி, கரூர் கிட்டு, கு. அடைக்கலம், என். எஸ். இளங்கோ ஆகியோர் பேசிய பின் தோழர் சம்பத் அவர்கள் இந்திய சர்க்காரின் ஐந்தாண்டு திட்டத்தைக் கண்டித்துச் சொற்பொழிவாற்றினார்.

அதிராம்பட்டினம்

18—3—55 மாலை 6-30 மணிக்கு, பழஞ்செட்டித் தெருவில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கு. அடைக்கலம், தலைஞாயிறு இரசாக், என். எஸ். இளங்கோ ஆகியோர் பேசியபின் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் இந்திய சர்க்காரின் ஐந்தாண்டு திட்டத்தின் ஓரவஞ்சனையை விளக்கிப் பேசினார்.

கல்லக்குடி

25—3—55 மாலை 6 மணிக்கு தோழர் அ. தம்புசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் செங்குட்டுவன், கே கந்தசாமி ஆகியோர் பேசியபின், தோழர் என் வி. நடராசன் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் தென்னாட்டுக்கு இழைக்கப்பெறும் அநீதியை எடுத்துக்கூறி நீண்டதோர் உரை நிகழ்த்தினார்.

கொண்டயம்பட்டி

22—3—55ல் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை 43-வது வட்டம்

27—3—55 காலை 11 மணிக்கு நடைபெற்ற கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

ஆரணி

பொன்னேரி வட்டம் ஆரணியில், 20—3—55ல், தோழர் தேவராசன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தோழர் பா. சு. மணி, உமர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கம்பம்

23—3—55 இரவு 7 மணிக்கு, வ. உ. சி. மைதானத்தில், தோழர் எம். சிக்கந்தர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் பி. சிக்கையா, கே. ஏ. கலையழகன், எஸ். முத்து, எஸ். அப்பாவு ஆகியோர் பேசியபின் தோழர் ஈ. வெ. கி. சம்பத், மத்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாக தென்னாடு புறக்கணிக்கப்படுவதை விளக்கி நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

மம்சாபுரம்

20—3—55-ல், தோழர் சி. அய்யாச்சாமி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் விளம்பரப்படுத்தப்பட்டது.

இராசபாளையம்

20—3—55 பிற்பகல் 4 மணிக்கு தோழர்கள் தங்கம், கார்மேகம் தலைமையில் சைக்கிள் ஊர்வலம் நடைபெற்று கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கைத்தறி - வார விழா

★

மாணம்பதி

24—3—55 மாலை 5 மணியளவில், செங்கற்பட்டு மாவட்டம் மாணம்பதி கிராமத்தில், பள்ளிக்கூட காம்பவுண்டில் அமைக்கப் பெற்றிருந்த பந்தலில், திரு. வி. இராமசாமி தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது முன்னுரையில், கைத்தறிவார விழா கொண்டாடுவதின் நோக்கம் பற்றி விரிவுரையாற்றினார்

பின்னர், தோழர்கள் கே. எஸ் பார்த்சாரதி, சி. வி. எம். அண்ணாமலை, இராம. அரங்கண்ணல், அ. பொன்னம்பலனார் ஆகியோர் கூட்டுறவுக் கழகத்தின் முயற்சி பற்றியும், சர்க்கார், கைத்தறிவாரம் கொண்டாடி கை நெசவுத் தொழிலாளருக்குக் காட்டிவரும் ஆதரவையும், மில் முதலாளிகட்கும், கதர் உற்பத்திக்கும் காட்டுகின்ற ஆதரவையும் எடுத்துக்காட்டி, கை நெசவுத் தொழில் வளர வேண்டுமானால் மில் துணிகள் போட்டி ஒழிக்கப்பட வேண்டுமென்றும் எடுத்துக் கூறினர்.

இவ்விழாவையொட்டி, பல கூட்டுறவு நிலையங்கள் மூலம் பல ரகக் கைத்தறித் துணிகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், பள்ளிக்கூட மாணவர்கள், ஆசிரியர்கள், கைத்தறி துணியையே பொது மக்கள் ஆதரிக்க வேண்டுமெனும் நோக்குடன் பெரியதோர் ஊர்வலம் ஒன்றும் நடத்தினர்.

கூட்டத் துவக்கத்தில் தோழர் முத்துச்சாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

இறுதியில் படக் காட்சிகளும் காட்டப்பட்டன.

குன்றத்தூர்

குன்றத்தூர், மற்றும் இரு கிராம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் சார்பில், 25—3—55 மாலை 7 மணி அளவில், பெரிய தெருவில், காஞ்சீபுரம் தோழர் கே. எஸ். பார்த்தசாரதி தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் எம். எஸ். அப்துல் மஜீது, தட்சிணாமூர்த்தி, முசவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கும்பகோணம்

21—3—55 மாலை 6 மணிக்கு, கும்பகோணம், துவரங்குறிச்சி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில், வி. ராமமூர்த்தி தலைமையில் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அப்துல் ஹக்கீம், கே. கே. நீலமேகம், சி. சாமிநாதன், பி. லெட்சுமி காந்தனார் ஆகியோர், 'கைத்தறி வார விழா'வின் நோக்கம்பற்றியும், கைத்தறி ஆடைகளை பொது மக்கள் வாங்க வேண்டிய அவசியம் பற்றியும் விளக்கிப் பேசினர்.

ஒரக்காட்டுப்பேட்டை இளங்கோ நாடக மன்றம்

21—3—55 இரவு 8 மணிக்கு, மன்றப் பொதுக்குழுக் கூட்டம் தி. மு கழக அலுவலகத்தில் நடைபெற்றபோது, ஏப்ரல் திங்கள் இரண்டாவது வாரத்தில் 'பலி பீடம்' எனும் நாடகம் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

செய்திச் சுருள்

★

மதுரை சந்தைப்பேட்டை அண்ணாதுரை இலவச படிப்பகம்

13—3—55 மாலை 3 மணிக்கு, படிப்பகக் கட்டிடத்தில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: எஸ். முனியப்பன்; துணைச் செயலாளர்: எஸ். சி. மாணிக்கம்; பொருளாளர்: ல. வ. கிருட்டிணன்; விளம்பர உறுப்பினர்கள்: தே குருசாமி, வே. பா. சுப்பிரமணியன்; செயற்குழு உறுப்பினர்கள்: ஏ. வி. எஸ். சவுந்தரபாண்டியன், பி. சவுந்தரபாண்டியன், சி. பாக்கியம், ஆர். வி. முத்துச்சாமி, மா. தனசேகரன், ந. விசயராகவன், ஏ. வி. வி. ராமசாமி, ச. மீனாட்சிசுந்தரம், அ. பாண்டியன்.

முதலமைச்சரிடம் மகஜர்

14—3—55 அன்று முதலமைச்சர் காமராசர் அவர்கள் துறையூர் வருகை தந்தபோது, துறையூர் சலவைத் தொழிலாளர் சங்கச் சார்பில் அவருக்கு 'வரவேற்பளிக்கப்பட்டது. துறையூரில், தண்ணீர் இல்லாமலும்; சலவைத் தொழில் செய்வதற்கு வேண்டிய வசதிகளின்றியும் அவதிப்படும் சலவைத் தொழிலாளரின் துயர் நீக்கும் பொருட்டு, 'டோபிகானா' ஒன்று ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கோரிக்கொண்ட விண்ணப்பம் அவரிடம் தரப்பட்டது.

* * *

திருச்சி பீடித் தொழிலாளர்களின் சார்பில், தோழர்கள் எம். எஸ். மணி, ஐ எம். ஷரீப், நடேசன் பாஜிபாய், சையத் அலி, தங்கமுத்து ஆகியோர் 17—3—55 காலை 9 மணிக்கு, திருச்சி முசாபரி பங்களாவில், சென்னை முதலமைச்சர் காமராசரைச் சந்தித்து, பீடி, சுருட்டுத் தொழிலாளர்களின் குறைகளை எடுத்துச்சொல்லி அது சம்பந்தமான மகஜர் ஒன்றும் கொடுத்தார்கள்.

வாணியம்பாடி நகர நல கண்காணிப்பு சங்கம்

இந்நகரில், பஸ் நிலைய 'அமுதா கேப்' மாளிகையில், தோழர் ஏ. எல். முனிரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் 'நகர நல கண்காணிப்புச் சங்கம்' ஒன்று நிறுவப்பட்டது. பின்னர் சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் சி. முனிசாமி; துணைத் தலைவர் : வை. கணேசன் ; செயலாளர்கள் : வி. என். தத்தப்பன், டி. ஏ. ஆறுமுகம், டி. ஜே. நாதன். 25 பேர்கள் செயற் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், இந்நகரில், நகர சபையினால் ரூ. 1 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பிரசவ, மருத்துவ விடுதியை உடனே திறக்கக் கோரியும், தற்போதுள்ள ஏராளமான வரி விதிப்புகளைக் குறைக்க வேண்டுமென்றும், நகரில், டவுன் மண்டபம் ஒன்று கட்ட நகரசபையைக் கேட்டுக்கொண்டும், நகரில், கம்பளித் தொழிற்சாலை ஒன்றை விரைவில் திறக்க அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பச்சை வாழை இலை வியாபாரிகள் சங்கம்

21—3—55ல், தஞ்சாவூரில், சென்னை மாநில பச்சை வாழை இலை வியாபாரிகள் சங்கக் கூட்டம் தோழர் எம் ஏ. வகாப் தலைமையில் நடைபெற்றபோது, சென்னை மாநில சர்க்கார், வாழை இலைக்கு விதித்திருந்த விற்பனை வரியை ரத்து செய்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டும், ஒரு முனை விற்பனை வரியை எதிர்த்தும், மாநில அரசாங்க நடவடிக்கைகளை தமிழ் மொழியிலேயே நடத்த வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சத்திரப்பட்டி தி. இ. மு. கழகத் துவக்கவிழா

11—3—55 இரவு $7\frac{1}{2}$ மணிக்கு, திரு. வி. க. நினைவுப் படிப்பகத்தில் தோழர். ம. தமிழ்மணி தலைமையில் நடைபெற்ற திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகத் துவக்க விழாக் கூட்டத்தில் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ச. உமையது, துணைச் செயலாளர்: சு. இராசகோபால்; பொருளாளர்: இரா. பு நடராசன்; விளம்பர உறுப்பினர்கள்: ஏ. இராசேந்திரன், ஏ. வளர்மதி; நிதி வசூலிப்பவர்கள்: ஏ. இராசேந்திரன், சு. இராசகோபால், எஸ். வி. முத்து, எஸ். எஸ். முத்துசாமி; செயற்குழு உறுப்பினர்கள்: கே. எஸ். முத்துசாமி, மு குருபாக்கியம், கு. பழனிச்சாமி, மா. தமிழ்மணி, சிவ. அண்ணாமலை, த. மு. சங்கிலிக்காளை, கலையரசு. பின்னர் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

சென்னை குழந்தைகள் சங்கம்

13—3—55-ல், எண் 1/39 பார்த்தசாரதிப் பேட்டைத் தெருவில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் தேனாம்பேட்டை கிளையின் பொதுக் குழு கூட்டத்தில், துணைத் தலைவராகத் தோழியர் வி. ஜெயலட்சுமியும், செயலாளராகத் தோழர் டி. சபாபதியும், செயற் குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் டி. கோபாலகிருஷ்ணன், எம். ஆறுமுகம், பி. எஸ். சம்பந்தம், தோழியர் ஜி. கே. ஜானகியம்மாள், எம். குப்பம்மாள், டி. வி. பங்கஜம்மாள் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருமணங்கள்

13—3—55 காலை 10 மணிக்கு பெரம்பூர் பாரக்ஸ் ரோட், காண்ராண்ஸ்மித் நகரில் தோழர் எஸ். மதுரைமுத்து — தோழியர் எஸ். செங்கமனி திருமணம் தோழர் எம். எஸ். முத்து தலைமையில் நடைபெற்றது. திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

15—3—55 காலை 10 மணிக்கு, மாயூரம், ஆசிரியர் வேலாயுதம் மன்றத்தில். தோழர் எம். எஸ். மணி—தோழியர் சகுந்தலா திருமணம் தோழர் வி. சங்கையன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். இட்டப்பா, கே. எஸ். சௌந்திரராசன், வி.ஏ.பாண்டியன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இத் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

பிறப்பு

மதுரை, மணிநகரம் தியாகராயர் படிப்பகத் தோழர் (செயலாளர்) இரா. சந்திரன் அவர்களது துணைவியார் தோழியர் குருவம்மாள், 17—3—55 காலை 9 மணிக்கு ஒரு ஆண் மகவுக்குத் தாயானார். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்-நன்றி-பொறுப்பாளர்.

• • •

மாயூரம் தோழர் கி. காந்தி அவர்களின் துணைவியார் சந்திரோதயம் அவர்கள் கடந்த 20—3—55 அன்று ஓர் ஆண்மகவுக்குத் தாயானார். தாயும்—சேயும் நலம்.

வருந்துகிறோம்

அத்தக்குடி தோழர் கே. பெரியசாமி அவர்களது சகோதரர் தோழர் அனந்தப்பன் (வயது 22) சென்ற 19—3—55ல் இயற்கை எய்திய செய்தி கேட்டு வருந்துகிறோம். (ஆ-ர்.)

ஏழைநாட்டில் கவர்னருக்கு ஏன் இத்தனை லட்சம்?

பெருந்தொகை தரக்கூறும் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்

சட்டசபையில் கோவிந்தசாமி முழக்கம்

" அரசியல் சட்டப்படி, கவர்னர் இருக்க வேண்டும்; ஆனல், அவருக்காக ஆண்டொன்றுக்கு ரூ. **9,72,000** செலவு செய்ய வேண்டிய நிலைமை—நிர்ப்பந்தம் சர்க்காருக்கு ஏற்பட்டுள்ளது; எனவே, இவ்வளவு பெருந்தொகையை ஒருவருக்குச் சம்பளமாகக் கொடுக்க வழிசெய்யும் அரசியல் சட்டப் பிரிவைத் திருத்த வேண்டும்; 'கவர்னர்' என்று ஒருவர் இருப்பதால், அரண்மனை சிப்பந்திகளுக்காக ரூ. **226** ஆயிரமும், அரண்மனை பராமரிப்புக்கென ரூ. **325** ஆயிரமும் செலவு செய்ய வேண்டிய நிலைமையில் இம் மாநில சர்க்கார் இருந்து வருகிறது.

"நமது நாடோ மிக ஏழ்மைமிக்க நாடு; பிரதமர் நேரு அவர்கள், 'சோஷலிச பாணி சமுதாய அடிப்படை'யில் நாடு அமையப்பட வேண்டுமென்று வலியுறுத்திய பிறகும், கவர்னர் எனப்படும் ஒருவருக்கு இப்படி அதிகச் சம்பளம் கொடுப்பது சரியல்ல என்ற காரணத்தால் அதை அனுமதிக்கும் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்; அதற்காக மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடம் சிபாரிசு செய்ய வேண்டும்.

" அதுபோலவே, மாநில அமைச்சர்களின் சம்பளமும் ரூ. **500** ஆகக் குறைத்துக்கொள்ள வேண்டும். அப்படி குறைக்கப்படாவிட்டாலும், 'அடையாள'மாக நூறு ரூபாயையாவது குறைத்துக் கொண்டாலாவது, அவர்கள் உண்மையிலேயே 'சோஷலிச சமுதாய'த்தை உருவாக்கப் பாடுபடுகிருர்கள் என்று கருத முடியும்."

—இவ்வாறு, தோழர் வ. கோவிந்தசாமி அவர்கள், 22—3—55ல் நடைபெற்ற சென்னை சட்டசபைக் கூட்டத்தில், வெட்டுப் பிரரேபனையை ஆதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசும்பொழுது குறிப்பிட்டதாவது :—

" மந்திரி சபையை விரிவுபடுத்துவது கூடாது என்று கூறப்பட்டது; ஆனல், சம்பளம் எதுவும் வாங்காமல், கௌரவ மந்திரிகளாகப் பணியாற்றுவதானல் மந்திரி சபையை விரிவுபடுத்துவதில் ஆட்சேபனை எதும் இல்லை.

" அமைச்சர்கள் எங்கே சென்ருலும் ஆடம்பரமாக இல்லாமல் ஏழை மக்களின் பிரச்சினைகளில் மிகவும் கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும்; அவர்களிடம் மகஜர் ஏதாவது தரப்பட்டால், அதை வாங்கி தங்கள் பைக்குள் போட்டுக் கொள்வது அல்லது தங்கள் பக்கத்தில் இருக்கும் காரியதரிசிகளிடம் கொடுத்துவிடுவதுமன்றி, அதுபற்றி ஆராய்ந்தறிந்து தக்க நடவடிக்கை எடுப்பதில்லை; இனிமேலாயினும், அமைச்சர்கள் அந்நிலையை மாற்றிக்கொண்டு, அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குறைகளைக் கவனித்து, தக்க நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

" தங்கள் தங்கள் தொகுதிகளில்கூட, செய்ய வேண்டிய நல்ல சில காரியங்களைச் செய்ய முடியாத நிலையில் நமது மந்திரிகள் இருக்கிருர்கள்; இக்குறைபாடுகளையெல்லாம் கவனித்து இனிமேலாவது வேண்டிய நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும்,"

(நேரம் முடிந்துவிட்டதால், தோழர் வ. கோவிந்தசாமி அவர்கள் தமது பேச்சை நிறுத்திக் கொண்டார்.)

துங்கபத்திரா அணைக்கட்டு

மைசூர் — ஆந்திரா தகராறு

கர்நூல், மார்ச் 29—

"ரூ. 19 கோடி மதிப்பில் திட்டமிடப்பட்டுள்ள துங்கபத்திரா கால்வாய் திட்டத்தில், பல பிரச்சினைகளில் ஆந்திரா—மைசூர் மாநில சர்க்கார்கள் ஒத்துப்போக முடியவில்லை," என்று ஆந்திர கவர்னர் திரிவேதி நிருபர்களிடை பேசுகையில் கூறியிருக்கிருர்.

மைசூர் அரசாங்கம் எழுப்பியுள்ள ஆட்சேபணைகள் பற்றிய தங்கள் கருத்தையும், ஆந்திர அதிகாரிகள் தயாரித்த நகல் திட்டத்தினையும் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பிவிட்டதாயும் திரிவேதி கூறியிருக்கிருர்.

காங்கிரசிலிருந்து விலகுக !

மலேயா தமிழர்களுக்கு வேண்டுகோள்

மலேயா இந்தியக் காங்கிரசிலிருந்து தங்கள் உறுப்பினர் பதவியை திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு கோரி, மலேயா தமிழர்களுக்கு சிங்கப்பூரில் உள்ள தமிழர் பிரதிநிதித்துவக் குழுவின் கிளை வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளது.

" மலேயாவில் இந்தியர்களின் நலன்களுக்கு இந்தியக் காங்கிரஸ் துரோகம் செய்துவிட்டது; காங்கிரசின் சமீப காலத்திய நடவடிக்கைகள் சிலவற்றைக் கவனித்தால், தொடர்ந்து இனி காங்கிரசை ஆதரிப்பது, தற்கொலைக்கொப்பாகும்," என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், இந்தியக் காங்கிரஸ், சில பல உத்தியோகங்களுக்காக மலேயா சீனர்கள் சங்கத்துடன் அதிகமான தொடர்பு கொண்டிருப்பதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

1954-ம் ஆண்டில், இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான தேயிலையின் மொத்த மதிப்பு சுமார் ரூ 131,30,00,000; 1953-ம் ஆண்டில் ஏற்றுமதியானவற்றின் மதிப்பு சுமார் ரூ 103,10,00,000.

தோட்டிகள் - க்ஷவரத் தொழிலாளர் பிணக்கின் எதிரொலி

தாடி மீசையுடன் பலர் காட்சி தருகின்றனர் !

பாராபங்கி, மார்ச் 28—

உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த பாராபங்கியில், ஜாதி இழிவை உடைத்தெறிய உறுதிகொண்ட தோட்டிகள் சிலர், அங்குள்ள க்ஷவரக் கடைகளில் நுழைந்து க்ஷவரம் செய்யுமாறு, தொழிலாளர்களை வற்புறுத்தினர். இவர்களுக்கு க்ஷவரம் செய்வதானல் எங்கு உயர் ஜாதிக்காரர்கள் தங்களை ஒதுக்கிவிடுகிருர்களோ என அச்சங்கொண்ட க்ஷவரத் தொழிலாளர்கள், தோட்டிகளின் கோரிக்கையை நிறைவேற்ற மறுத்துவிட்டனர்.

இதன் பலனாக, க்ஷவரத் தொழிலாளர்களின் வீடுகளை சுத்தம் செய்ய முடியாது எனத் தோட்டிகள் மறுத்துவிட்டனர்.

தோட்டிகளின் பிடிவாதத்தின் எதிரொலியாக, க்ஷவரத் தொழிலாளர்களில் சிலர், தாங்கள் அதுவரை மேற்கொண்டிருந்த தொழிலுக்கு அறவே சீட்டுக்கொடுத்துவிட்டு, வேறு பணிகளுக்குப் போய்விட்டனர்.

இரு சாதியினரிடையும் சமாதானத்தை மீண்டும் நிலைநாட்ட முயற்சித்த அதிகாரிகள் தோல்வி கண்டனர்.

பிணக்கின் எதிரொலியாக, மேற்படி ஊரில் உள்ள பலர் மீசையும், தாடியும் உடைய திருக்கோலத்தில் காட்சி தருகின்றனர்!

...கிடந்த தண்ணீர்த் தொட்டி ஒன்றில் அந்த நபர்கள் போட்டு விட்டனராம்.

பின்னர் அந்த நபர்கள், அக்குழந்தைகளின் தாயின் கழுத்திலிருந்த 10 பவுன் பெறுமான முள்ள தங்கச் சங்கிலியையும் கழற்றிக் கொண்டதோடு, அவரையும் தொட்டியில் தள்ளிவிட்டு ஓடிவிட்டனராம்.

சம்பவம் நடைபெற்ற சிறிது நேரத்திற்குள் வெளியே போய் வந்த சின்னசாமி கவுண்டர், தண்ணீர் தொட்டிக்குள் தள்ளப்பட்டுக் கிடந்த தமது மனைவி, மக்களையும் வெளியே எடுக்க, மனைவி மட்டும் உயிருடன் இருந்ததாகவும், மற்ற நான்கு குழந்தைகளும் இறந்து கிடந்ததாகவும் கூறப்படுகிறது.

சைகோன் முற்றுகை

தென்வியட்னும் பிரதமருக்கு எதிராக நடவடிக்கை

சைகோன், மார்ச் 29—

தெற்கு வியட்னும் பிரதமரான நகு—தின்—தியமை எதிர்க்கின்ற மூன்று மதப்பிரிவுகளின் இராணுவங்கள் தெற்கு வியட்னுமின் தலைநகரான சைகோனை முற்றுகையிட ஆரம்பித்துள்ளன என்று தெரிய வருகிறது. இந்த முற்றுகையின் நோக்கமெல்லாம் சைகோன் நகருக்கு வெளியிலிருந்து உணவு செல்லாமல் தடுப்பதற்கே ஆகும் என்று கூறப்படுகிறது.

இம்முற்றுகையை, 3 மதப் பிரிவுகளுள் ஒரு மதப் பிரிவான ஹோவா—ஹாவோவின் தளபதியான ஜெனரல் பாக்குட் தலைமையேற்று நடத்துவதாகவும், தமது நோக்கம், நகரை முற்றிலுமாக முற்றுகை யிடுவதல்ல என்றும். தமது வலிமையினைக் காட்டி சர்க்காரைக் கலகலக்கச் செய்வதே என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்க்காரிடம் தற்போது 10 - மாகாணங்களும், எதிர்ப்பாளர்களிடம் 2 மாகாணங்களும் இருந்து வருகின்றன.

சைகோனின் மக்கள் தொகை 15 லட்சமாகும்.

மூன்று மதப் பிரிவுகளுள் மற்ற இரு பிரிவுகளின் பெயர்கள்: காவோ—டாய்; பீன்—ஜுயன்.

இந்தக் கலகப் படைகளுக்கும், அதனை எதிர்க்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையே பல மோதுதல்கள் ஏற்பட்டனவாம். ஆயினும் பலத்த சைகலப்பு எதுவும் நடைபெறவில்லை என்று கூறப்படுகிறது.

ஆனல், பின்னர் கிடைத்துள்ள செய்தி ஒன்றின்படி, நள்ளிரவுக்கு முன் இயந்திரத் துப்பாக்கிகளினுலும் மற்றும் ஆயுதங்களினுலும் தாக்குதல்கள் ஆரம்பித்துள்ளனவாம்.

இந்த 3 மதப் பிரிவினரும், இந்த தகராறில் மன்னர் பாவோ-டாய் உடனடியாகத் தலையிட்டு பைசல் காணவேண்டுவதுடன், பிரதமர் நகு-தின்-தியமை பதவியிலிருந்து விலக்கிவிட்டு தாங்களே மாற்று மந்திரி சபையை அமைக்கத் தயார் என்றும் தெரிவித்து, தற்போது பிரான்சில் இருக்கும் மன்னருக்கு அறிவித்துள்ளனராம்.

இந்தியப் பேரரசின்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

காக மின்சார உலையையும் கைவிட வேண்டி இருக்கிறது. தொலைவில் இருந்து எறிந்து உருக்கப்படும் முறைக்குப் பதிலாக, சமீப காலமாக அருகில் இருந்து எறிந்து உருக்கப்படும் உருக்கு முறை ஆக்கம் பெற்று வருகிறது. இந்த உருக்கு முறைக்கு உயர்ந்த நிலக்கரி தேவையில்லை. எனவே, நெய்வேலி பழுப்பு நிலக்கரியிலிருந்து உருவாக்கப்படும் எரி பொருளிலிருந்தே சேலம் உருக்குத் தொழிலை உருவாக்க முடியும்.

" மேற்கூறிய வகையில் உருவாக்கப்பெறும் இரும்பை உருக்காக மாற்றுவதில் மேற்கோள்ளப்பட்டுவரும் முறைப்படி, உயர்ந்த உருக்காகக்கூட சேலம் கனிப் பொருளை உருவாக்க முடியும்."

மொத்தத்தில் 30½ கோடி டன் இரும்புக் கனிப் பொருள் அங்கிருக்கிறது என இந்தியப் பேரரசின் கனிப் பொருள் ஆராய்ச்சிக் குழுவின் அறிக்கை அறிவிக்கிறது.

காங்கமலை 550 லட்சம் டன்; கூடுமலை 125 லட்சம் டன்; பெருமாள்மலை 104 லட்சம் டன்; மேட்டூர் பகுதி 120 லட்சம் டன்; சித்தேரி மலைப்பகுதி 554 லட்சம் டன்; தீர்த்தமலை 130 லட்சம் டன், ராசிபுரம்—நாமக்கல் லுக்கிடையில் 340 லட்சம் டன்; கொல்லிமலை மலைப்பகுதி 670 லட்சம் டன்; பசனைமலை 110 லட்சம் டன்; ஆக மொத்தம் 30 கோடி 5 லட்சம் டன் என்று கணக்கிடப்படுகிறது.

பூமிக்கடியில் 100 அடிக்குக் கீழ் வரையில் இந்தக் கனிகள் இருக்கின்றன என்றும், பல நூறு அடி உயரத்திலிருக்கிற மலைப்பகுதிகளில் மிக அதிகமான கனிப் பொருள்கள் கிடைக்கும் என்றும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

மேலே உள்ள கணக்கு அளவைக் காட்டிலும் மூன்று அல்லது நான்கு பங்கு அதிகமான கனிப் பொருள்களும் இருக்க முடியும்.

"சேலம், திருச்சி, ஆற்காடு பகுதி பற்றி ஒரு முறையான ஆராய்ச்சி நடத்தினல், இதைப் போல இன்னும் எத்தனையோ இரும்புக் கனிப் பிரதேசங்கள் இருக்கக் கூடும்," என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

பஞ்சாப் சட்ட சபை...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கல் மசோதாமீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

அப்போது, லாலாஜிதர் நாத் ஷெரால் என்ற ஒரு உறுப்பினர் எழுந்து, மந்திரி ஒருவர்மீது, தாம் தயாரித்துள்ள லஞ்சக் குற்றச்சாட்டுப் பட்டியலை வாசிக்க அனுமதிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்

சபைத் தலைவர், அதற்கு அனுமதி மறுத்தும்கூட, தொடர்ந்து அவர், குற்றச்சாட்டு பட்டியலை வாசிக்க ஆரம்பித்தார்; உடனே தலைவர், சபையின் பாதுகாவலரை அழைத்து, அந்த உறுப்பினரை அவரது இடத்தில் உட்காரவைக்க வேண்டும்; அல்லது அவர் படிப்பதை நிறுத்தச் செய்யவேண்டும் என்று உத்திரவிட்டார்.

பாதுகாவலரும், நேராக அந்த உறுப்பினரின் இடத்திற்குச் சென்று, அவரிடம் இருந்த பட்டியலைப் பிடுங்கிக் கொண்டு சென்றுவிட்டார்; அப்போது எதிர்க் கட்சியினர், எதிர்ப்புக் குரல் எழுப்பினராம்!

ம. சோ. கட்சி உறுப்பினரான மணிராம் பக்ரி என்ற உறுப்பினர் எழுந்து சென்று பாதுகாவலருடன் விவாதிக்க முயன்ருர்.

ஸ்ரீராம் ஜோஷி என்ற உறுப்பினர், 'வெட்கம் வெட்கம்' என்ற எதிர்க் கட்சியினரின் குரலுக்கிடையே எழுந்து, பாதுகாவலர் நடந்துகொண்டது சரியல்ல என்றும், அவரைத் தண்டிக்க வேண்டும் என்றும் கூறினர்.

இதற்கிடையில், ஷெகால், சபையில் நிலவிய கூச்சலையும், குழப்பத்தையும் பொருட்படுத்தாது தன்னிடமிருந்த இன்னுமொரு குற்றச்சாட்டுப் பட்டியலை எடுத்து வாசிக்க ஆரம்பித்தார்.

ஷெகால், முதன் மந்திரியின் அறைகூவலுக்கு பதிலளிக்கும் வகையில் 34 குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர்.

சபைத் தலைவர், திட்டமான ஒரு தீர்மானத்தின் மீதன்றி வேறு வகையால், ஒரு மந்திரியின் நடத்தையைப்பற்றி சபையில் விவாதிக்கக் கூடாது என்று சட்ட திட்டங்களைக் காட்டி, மேலும் அது பற்றி விவாதிக்கக் கூடாதென்ருர்.

சபைத் தலைவருடன் ஒரு பக்கமும், இதர உறுப்பினர்களுடன் ஒரு பக்கமும் பலத்த விவாதம் இதுபற்றி நடந்தது.

முதன் மந்திரி தனது அறையில் வந்து அந்த குற்றப்பட்டியலைத் தருமாறு கேட்டார்; உறுப்பினர் தர மறுத்தார்.

சபையில் பலத்த குழப்பமும், கூச்சலும் ஏற்பட்டது.

சபைத் தலைவர், இந்த நிலை விடுபடுவதற்காக அரைமணி நேரம் சபையை ஒத்திவைத்தார்.

எதிர்க்கட்சியினர், மந்திரி மீது சபையிலேயே குற்றச்சாட்டுகளை எழுப்ப விரும்புவதாயும், முதன் மந்திரியிடம் சென்று குற்றப்பட்டியலைத் தர விரும்பவில்லை என்றும் கூறிவிட்டதுடன், ஒரு உறுப்பினர் எழுந்து, 'மந்திரிக்குக் கை விலங்கிட வேண்டும்,' என்றும் ஆத்திரத்துடன் கூறினராம்.

சபை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் கூடியபோது, அகாலிகள், கம்யூனிஸ்டுகள், காங்கிஜண்டா காங்கிரஸ், ஜமீன்தாரி லீக், ம. சோ கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் சபைத் தலைவருடன் சம்பவம்பற்றி விவாதித்துவிட்டு, சபையை விட்டு வெளியேறினர் என்று தெரிகிறது.

கொள்ளைக்கு 4-சிசுக்கள் பலி!

கோவைக்கு 6 கல் தொலைவிலிருக்கும் அக்பாராய்க்கன்பாளையத்தில் 8, 6, 4, 2 வயதுடைய நான்கு சின்னஞ் சிறு குழந்தைகள் கோரமாகக் கொலை செய்யப்பட்டனவாம்.

மேற்படி ஊரில், சின்னசாமி கவுண்டர் என்பவர் வீட்டில், அவர் இல்லாத நேரத்தில் வேறு இரண்டு நபர்கள் வந்து சின்னசாமியின் மனைவியான காளியம்மாள் என்பவரிடம் குழந்தைகளின் நகைகளையும், அவளுடைய நகைகளையும் மற்றும் வீட்டிலுள்ள விலை மதிப்புப் பெற்ற சாமான்களையும் கொடுத்து விடுமாறு கேட்டனராம். இதற்குள் அந்தக் குழந்தைகள் கூச்சலிட ஆரம்பிக்கவே, அவை ஒவ்வொன்றையும் கழுத்தை நெரித்து பக்கத்தில்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.